**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 9/2020**

<table>
<tr><td>Name: சின்னதம்பி</td><td>Caste:</td></tr>
<tr><td>Father's Name: சித்திர<br>Husband Name :</td><td>Calling:</td></tr>
<tr><td>Village:.</td><td>Religion:</td></tr>
<tr><td>Taluk:</td><td>Age:</td></tr>
<tr><td colspan="2">The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 09.04.2026</td></tr>
</table>

**<u>09.04.2026</u>**

**விசாரணை தொடங்கிய நேரம் 11.40 AM**

**வா.சா.1. – முதல் விசாரணை**

இவ்வழக்கில் நான் வாதி ஆவேன். எனது தரப்பில் 1–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாணவாக்குமூலத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களையும் எனது தரப்பு சான்றாவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

| வரிசை | தேதி | குறிப்பு | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1 | 12.02.1996 | சுந்தர முதலியார் என்பவர் பெருமாள் வகையறாவிடம் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள கூடிய ஆவணம் இல்லை என ஆட்சேபணை தெரிவித்து வா.சா.ஆ.1 பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. | அசல் |
| 2 | 19.07.1995 | சுந்தர முதலியாரிடம் இருந்து நான் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள கூடிய ஆவணம் இல்லை என ஆட்சேபணை தெரிவித்து வா.சா.ஆ.2 பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. | அசல் |
| 3 | | எனது பெயரிலான பட்டா பிரதிவாதி தரப்பில் தாவா சொத்திற்குரிய பட்டா அல்ல என ஆட்சேபணை தெரிவித்து வா.சா.ஆ.3 பிரதிவாதி தரப்பு | இணையத்தில் பதிவிறக்கப்பட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. | |
| 4 | | பிரதிவாதி பெயரில் தவறுதலாக தாக்கல் செய்யப்பட்ட பட்டா வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது | இணையத்தில் பதிவிறக்கப்பட்ட நகல் |
| 5 | 15.04.1998 | பிரதிவாதி குணசேகரன் வகையறாவிடம் இருந்து கிரயம் பெற்ற கிரைய பத்திரம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | சான்றிட்ட நகல் |

தாவா சொத்தில் எனக்கு சொந்தமான கிணறு இருப்பதை பாரப்பதற்காக நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் தாவா சொத்தை அளந்தார் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் சர்வேயர் அறிக்கை நீ.ம.சா.1 வரிசைகளாக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.50 AM**

**Sd/-R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**